தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

13 வயதுப்பிரிவு

(01.01.2011 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

மாவீரம் தமிழீழ வீரவரலாற்றின் உரம்

தமிழீழம் தமிழரது பூர்வீகத் தாயகம். மாந்த இனம் வாழத்தொடங்கிய நாள்முதல் தனித்தன்மையோடு தமிழரது மூதாதையர் வாழ்ந்த நிலம் ஈழத்தீவு. எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட எமது தாயகத்தை மீட்பதற்குப் பல்லாயிரம் உயிர்களை உரமாகக் கொடுத்துள்ளோம். இடப்பெயர்வு, புலப்பெயர்வு, வாழிட இழப்பு, அடக்குமுறை, பொருண்மியத்தடை என அத்தனை நெருப்பாறுகளையும் போராளிகளின் தியாகத்தாலும் மக்களின் நெஞ்சுரத்தாலும் எதிர்கொண்டு வென்ற வரலாறுகளைத் தன்னகத்தே கொண்ட நிலம் தமிழீழம்.

எங்கள் தாய்நாடு நிமிர்ந்துநின்ற வரலாற்றைக் காட்சிப்படுத்த விளைகின்றேன்.

அழகள்ளிச் சொரிகின்ற தமிழீழ நிலப்பரப்பு! இருள் நிறைந்த காடு! ஆர்ப்பரிக்கின்ற அலைகடல்! கார் முட்டிய வான்பரப்பு! பகை விரட்ட, வரியுடை தரித்து, சுடுகலன் ஏந்தி, தமிழன் படைதிரட்டி நின்ற பெருவீரம்! ஊர் பிரிந்து, உரு மறைத்து, பசிந்திருந்து பலசெய்தி சேகரித்த தனிவீரம்! பெற்ற பிள்ளையைக் காப்பகத்தில் சேர்த்துவிட்டு உற்ற துணையோடு களமுனைக்குச் சென்ற உச்ச அர்ப்பணிப்பு! போரில் விழுப்புண் தாங்கி, வாழுங்காலம் குறுகியபோதும் விடுதலை வேள்வியில் உறுதியாய் நின்ற ஓர்மம்!

தனக்கென வாழாத தனித்தன்மை! சுற்றத்தோடு பட்டம், பதவி அனைத்தையும் துறந்து தேசவிடுதலையை மூச்சாக்கிய ஆளுமைகள்! இழப்பதற்கு எதுவும் இல்லாத போதும் துவண்டு விடாத இறுமாப்பு! தடைகளைத் தகர்த்தெறிய ஒன்றுபட்ட பெருவாழ்வு! வெளிநாடுகளிலிருந்து செல்வோரை வரவேற்கும் நந்தவனம்! சொந்த நிலம் நாடிப் பறந்த உறவுகளின் கூடாரமாய் மகிழ்வை அள்ளித் தந்த பொற்காலம்! தமிழீழ விடுதலைப் போரிலே வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் நடுகற்களைத் தாங்கி நின்ற துயிலுமில்லங்கள்! இவை அனைத்தும் எம் கண்முன்னே இருந்தன.

விடுதலை விளிம்பில் போராற்றலோடு பொருண்மியப் பெருக்கத்தையும் பெற்று நின்ற தமிழினத்தின் தாயகத்தை எம்மிடமிருந்து பறித்தெடுத்து, அழித்துக்கொண்டிருக்கிறார்கள். யாவும் அறிந்தும் புரிந்தும் செயலற்றுச் சிதறிக்கிடக்கிறோமே! ஏன் இந்த அவலம்? தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் என்ற வல்லமையின் வழிகாட்டலால் செதுக்கப்பட்டவர்கள் நாங்கள்! கால ஓட்டத்தில் கரைந்துவிடாத ஒப்பற்ற அர்ப்பணிப்புகளைச் செய்த இனத்தின் பிள்ளைகள் நாங்கள்!

தக்கன பிழைக்கும் என்பது விதி! எம்மை நாமே மீளாய்வு செய்வோம். எத்தடை வரினும் அத்தனை தடைகளையும் உடைத்த மரபுவழி வந்தவர் நாம். இடர்களையும் சூதுகளையும் அறிவாயுதம் தாங்கி இறுமாப்புடன் எதிர்கொள்வோம். அனைத்துலக இயக்கத்தில் புறந்தள்ளிவிட முடியாத இனம் நாம் என்பதை ஆற்றல் கொண்டு நிறுவுவோம். உலகமே உற்று நோக்கிய தமிழீழ நிகழரசை, எமக்கான தனியரசாக நிலைநிறுத்துவோம். விடுதலை உணர்வை அணையாது காத்து, தக்ககாலத்தில் தமிழரசு அமைத்து ஆள்வோம். வித்தான மாவீரர் எம்முள் உணர்வாகி நிற்க, அவர்களை வணங்கி, வீறுகொண்டு எழுவோம்!

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”